**சிலாபம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிலாபம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,952,220 தொகையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,235,320 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 145,650 தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 51,900 தொகையன நூலகப் புத்தங்கள் ரூபா 33,985 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் அட்டவணையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 6,368,520 ஆக இருந்த போதிலும் அது ரூபா 7,237,861 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 20,313,549 ஆன சம்பளம் மீள் நிரம்பல் ரூபா 16,731,416 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வட்டியுடன் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,991,699 தொகையான நிலையான வைப்பொன்றிலிருந்து ரூபா 6,250,000 மாத்திரம் முதலீட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டுக் கணக்கு ரூபா 741,699 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் நன்கொடையான கிடைத்திருந்த ரூபா 381,500 ஆன மருந்து இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,425,943 தொகையான மொத்தப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கையில் அதற்குரியதாக மீண்டும் ஒரு முறை ரூபா 306,182 கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

22 கணக்கு விடயங்களுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் 'V பயன்பாட்டுப் பதிவேடுகள் மற்றும் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 68,086,679 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 9,447,385 தொகையான பெறவேண்டிய மீதிகளில் அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 63,465,127 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளாக இருந்ததுடன் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியதாக காணப்படும் ரூபா 13,944,828 தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 200,337,534 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) | | முச்சக்கர கட்டணங்கள் திருத்தப்பட்டு அறவீடுகளுக்காக விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | 153 ஆம் பிரிவு | | |
| | 170 ஆம் பிரிவு | 67,603,666 | 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள வீதவரி மற்றும் நிலுவை வாடகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நி.பி 571 | 1,644,574 | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தேவையான சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,382,877 ஆக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 21,969,182 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

#### 2.2.1 செயலற்ற வங்கிக் கணக்கு

தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள சபைக்குரிய செயலற்ற வங்கிக் கணக்கொன்றில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி ரூபா 493,245 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 22,508,000 | 22,483,370 | 11,088,645 | 37,053,392 | 21,776,000 | 21,616,600 | 11,100,816 | 31,878,914 |
| (ii) | வாடகை | 42,400,000 | 36,307,058 | 14,988,484 | 30,550,274 | 40,668,000 | 35,138,370 | 23,503,069 | 28,985,311 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,831,000 | 1,721,590 | 941,000 | 780,590 | 1,735,000 | 708,600 | 708,600 | 69,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 27,717,000 | 25,535,598 | 618,930 | 59,104,762 | 16,910,000 | 15,445,726 | 15,445,600 | 126 |

குறிப்பு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

ஆண்டின் பட்டியலிடப்பட்ட வீதவரி மற்றும் நிலுவை வாடகை முறையே 30 சதவீதம் மற்றும் 39 சதவீமாக இருந்தது.

**2.3.3 வீதவரி மற்றும் வரி**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் வாடகை ரூபா 31,878,914 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 22,483,370 ஆன பட்டியல்களுடன் ரூபா 11,088,645 தொகை ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மொத்த நிலுவை ரூபா 37,002,095 ஆக இருந்தமையால் வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை குத்தகை வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 28,985,311 ஆக இருந்ததுடன் ஆண்டின் ரூபா 36,307,058 ஆன பட்டியலுடன் மீளாய்வாண்டில் 33 சதவீதத்திற்குச் சமமான ரூபா 14,988,484 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் மீது கடை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 12,653,923 ஆன நிலுவை கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 முத்திரைக் கட்டணங்கள்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 44,500,000 ஆக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளன.

**(அ) உப விதிகள்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 24 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) **திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

நகர சபை எல்லைக்குள் நாளொன்றுக்கு சேகரிக்கப்படும் 12 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் கடல் மற்றும் களப்பு என்பவற்றை அண்மித்த பிரதேத்திற்கும் ஏனைய திறந்த இடங்களிலும் விடுவிக்கப்படும் நிலைமையில் எதிர்காலத்தில் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படக்கூடிய ஆபத்தொன்று காணப்படுகின்றது. இந்நிலைமையை தவிர்ப்பதற்கான நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் சுற்றாடலுக்கு சாதகமான வகையில் முகாமைத்துவம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் அடையக்கூடிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது நடமாடும் சேவைகளை நடாத்துதல், மனித வள முகாமைத்துவம், ஊழியர் மேம்பாடு தொடர்பிலும் வீதி அபிவிருத்தி உட்பட பொதுமக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தன. இந்நோக்கங்கள் தொடர்பாக விபரங்கள் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மனித மற்றும் பௌதீக வளங்கள் இனங்காணப்படாடல் இருந்ததுடன் இலக்குகளை அளவிடுவதற்கு சுட்டிககள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய ரூபா 51,180,000 ஆன தீயணைக்கும் வாகனமொன்று முன்னைய ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அதற்காக நி.பி 104(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாகனத்திற்காக முழுமையான காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் திருத்தத்திற்கு உரிய ரூபா 879,500 ஆன முழுத்தொகையையும் சபைக்கு ஏற்க நேர்ந்தது.

(ஆ) நகர சபை வளவில் 351 சதுரஅடி அளவிலான கட்டிடத்தினுள் சபை ஊழியர்களால் 2017 ஆம் ஆண்டு முதல் சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் 2018 பெப்ரவரி வரையிலும் அதற்காக எவ்வித வாடகையொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபையின் உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றின் பிரகாரம் குத்தகையாளர்களால் 43 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையால் எவ்வித நடவடிக்கைளும் எடுத்திருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) **அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் இரண்டாம் தர பதவிகளில் 56 வெற்றிடங்களும் ஆரம்ப தர பதவிகளில் 15 வெற்றிடங்களும் 02 மிகைகளும் காணப்பட்டன.

**(ஆ) ஊழியர் கடன்**

ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் மரணித்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 33,000 ஆன கடன் மீதி 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுவதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மின் உபகரணங்களுக்கான கட்டளைகள், களஞ்சிய பெறுவனவுக் குறிப்பு மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் போன்ற விபரங்கள் பல சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பயன்படுத்தப்படாத / விளைவற்ற சொத்துக்கள்**

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017 மற்றும் நகர சபை நிதியத்தின் மூலம் ரூபா 9,558,329 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2017 யூலை 03 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சுடலைச்சாலையில் தகண நடவடிக்கை 2018 மே 30 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 வாகன பயன்பாடு**

சபைக்கு சொந்தமான 25 வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | காணி மற்றும் கட்டிடங்களின் நிலைத்திருதன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர் | பழைய கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கடன்கொடுத்தோர் | பழைய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | வருமான நிர்வாகம்ம் | வருமானத்தை பட்டியலிடல் மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதில் குறைபாடுகள் காணப்படல். |
| (உ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |